**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : STC 147-2025 (419/2024) |
| Deposition of witness for | Prosecution : LW 3- PW 3 |
| | Defence : |
| | Court : |
| Name : வெங்கட கிருஷ்ணன் | Father's Name: ஜெயசிம்மன் |
| | Husband Name: |
| Village/Town : | Taluk : |
| | Calling : சென்னை போத்தீஸ் துணிக்கடை மேற்பார்வையாளர். |
| | Age : 23 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02.02.2026

**எதிரி ஆஜர்.**

(சாட்சியின் அடையாளம் கீழ்பென்னாத்தூர் தலைமைக் காவலர் திரு. விஜயகுமார் அவர்களின் மூலம் உறுதி செய்யப்பட்டது)

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை போத்தீஸ் துணிக்கடையில் மேற்பார்வையாளராக பணிசெய்து வருகிறேன். அ.சா.2ன் தகப்பனாரைத் தெரியுமா என்றால் தெரியும் அவரது பெயர் தெரியாது. கடந்த 05.12.2021ம் தேதி சுமார் 04.40 மணியளவில் எங்கள் வீட்டில் இருந்து கிளம்பி பென்னாத்தூர் வந்தேன். பென்னாத்தூர் வரும்போது மணி 05.00 இருக்கும். எனது சித்தப்பா வந்தபோது அவரது பேகை நான் வாங்கிக்கொண்டு மேற்படி இருசக்கர வாகனமான TN 25 BL 5128 வண்டியில் எனது சித்தப்பா கார்த்தி வண்டியை ஓட்ட நான் பின்புறம் உட்கார்ந்து வந்தேன். கீழ்பென்னாத்தூரில் இருந்து அவலூர் பேட்டை வழியாக கோட்டான்

ஏரியருகே செல்லும்போது கன்னியம்மன் கோவிலின் அருகே 20 மீட்டடர் அருகே நாங்கள் 20ல் இருந்த 25 கிலோமீட்டர் வேகத்தில் சென்றபோது வளைவுக்கு முன் ராயல் என்பீட்டு வாகனத்தின் எண். TN 25 BL 2000 என்ற வண்டியை ஓட்டி வந்து எங்கள் வாகனத்தின் மீது மோதிவிட்டார். அப்போது ராயல்என்பீட்டில் இருந்த கம்பிகள் எனது சித்தப்பாவின் தொடை, கட்டைவிரல், கை முட்டி, கண்ணருகே காயம் ஏற்பட்டுவிட்டது. எனக்கு பெரிதளவில் காயம் ஏதும் இல்லை. பின்னர் எனது சித்தப்பா வீட்டிற்கு தகவல் கொடுத்தார். பின்னர் எனது பாட்டி, சித்தி ஆகியோர் வந்து ஆம்புலென்ஸ்க்கு தகவல் கொடுத்து மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர். நான் பயந்துவிட்டதால் வீட்டிற்கு வந்துவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்குவிசாரணை**</u>

எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் 4.45 மணிக்கெல்லாம் தகவல் பெற்று 05.00 மணிக்கெல்லாம் சித்தப்பாவை கூட்டிவர பென்னாத்தூர் வந்துவிட்டேன் என்றால் சரிதான். எனது சித்தப்பா எதுவைர நடந்து வந்தார் என்றால் பூக்கடை வரை நடந்துவந்தார். எனது சித்தப்பா எத்தனை பேக் எடுத்துவந்தார் என்றல் ஒரு பேக் தான் எடுத்து வந்தார். போலிசாரின் வாக்குமூலத்தில் 20–25 கிலோமீட்டர் தூர வேகத்தில்தான் சென்றேன் என்று நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நாங்கள் மெதுவாக சென்றேன் என்றும் எந்த வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. கையில் எனக்கு ஏதேனும் அடிப்பட்டதா என்றால் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. மேற்படி சிராய்ப்பு காயம்

ஏற்பட்டது என்று போலிசார் வாக்குமூலத்தில் நான் சொல்லாததால் எனக்கு எந்தவொரு காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் பின்புறம் உட்கார்ந்து அ.சா.2 வாகனம் ஓட்டியிருந்தால் அதிகமான காயம் எனக்கு ஏற்பட்டிருக்கும் அவ்வாறு எந்த காயமும் ஏற்டாமல் போனதில் இருந்தே நான் சாட்சியம் அளிப்பது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE, KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : STC 147-2025 (419/2024) |
| Deposition of witness for | Prosecution : LW 2- PW 2 |
| | Defence : |
| | Court : |
| Name : கார்த்திக் | Father's Name: குமரவேல் |
| | Husband Name: |
| Village/Town : | Taluk : |
| | Calling : இராணுவம் |
| | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02.02.2026

**எதிரி ஆஜர்.**

(சாட்சியின் அடையாளம் கீழ்பென்னாத்தூர் தலைமைக் காவலர் திரு. விஜயகுமார் அவர்களின் மூலம் உறுதி செய்யப்பட்டது)

**முதல் விசாரணை :**

நான் தற்போது சண்டிகரில் ராணுவத்தில் பணிபுரிகிறேன். அ.சா.1 குமரவேல் எனது தந்தை ஆவார். பட்டியல் சாட்சி-3 வெங்கட கிருஷ்ணன் எனது அண்ணன் மகன் ஆவார். 2021ம் ஆண்டு, டிசம்பர் மாதம், 4ம் தேதி ஜம்முவில் இருந்து விமானத்தின் மூலமாக 5ம் தேதி காலை சென்னைக்கு வந்து பின்னர் அங்கிருந்து பஸ்பிடித்து மாலை சுமார் 05.00 மணியளவில் கீழ்பென்னாத்தூர் டவுனுக்கு வந்துவிட்டேன். பின்னர் நான் எனது அப்பாவிற்கு போன் செய்து எனது அண்ணன் மகனை இருசக்கரத்தை கொண்டு வரசொன்னேன். பின்னர் எனது அண்ணன் மகன் வெங்கட கிருஷ்ணன் கொண்டுவந்த பஜாஜ் பல்சர் TN 25 BL 5128 என்ற வாகனத்தில் நான் வாகனத்தை ஓட்ட பின்புறம் வெங்கட கிருஷ்ணன் உட்கார்ந்து வர கன்னிமார்

கோவிலுக்கு முன்பு நாங்கள் சென்றுக்கொண்டிருந்த போது ராயல் என்பீல்டில் இருசக்கர வாகனத்தின் எண்.TN 25 BA 2000 என்ற வண்டியை ஓட்டிவந்த முருகன் வேகமாக வந்து எனது இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். அந்த விபத்தில் எனக்கு வலது பக்க கை எலும்புகள் உடைந்துவிட்டது. வலது காலில் உள்ள கட்டைவிரல் மேல் உள்ள சதைகள் கட்டாகி தொங்கிவிட்டது. முட்டிக்கு மேலும், கண்புருவத்தின் மேலும், இடது மற்றும் வலது கண்ணின் கீழ்புறத்திலும் காயம் ஏற்பட்டது. பின்னர் எனக்கு விபத்து ஏற்பட்டுவிட்டது என்று எனது அப்பாவிற்கும் எனது மனைவிக்கும் தகவல் சொன்னேன். பின்னர் ஆம்புலென்ஸ் வந்தது அதில் ஏறி திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் முதல் உதவி செய்தார்கள். பின்னர் நான் ராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்னர் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை</u>

போலிசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த இடத்திலும் விசாரித்தார்கள் மருத்துவமனையிலும் விசாரித்தார்கள். கீழ்பென்னாத்தூர் முதல் அவலூர்பேட்டை பைபாஸ் செல்லும் சாலை வரை செல்லும் ரோடு வளைவான ரோடு என்றால் சரிதான். நான் இராணுவத்தில் இருந்து கீழ்பென்னாத்தூர் வந்ததற்கு ஏதேனும் நான் ஆதாரம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. இருசக்கர வாகனத்தில் என் பின்புறம் உட்கார்ந்து வந்த நபருக்கு லைசன்ஸ் உள்ளதா என்றால் இல்லை. நான் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தன் என்றால் 2, 3 மணி நேரம் இருந்தேன். போலிசார் என்னை அந்த 2, 3 மணிநேரத்தில் தான் இருந்தேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சுய நினைவுடன் தான் இருந்தேனா என்றால் கொஞ்சம் மயக்கத்தில் தான் இருந்தேன். போலிசார் என்னை மயக்கநிலையில் இருந்த போது விசாரித்ததால்

என்ன வாக்குமூலம் கொடுத்தேன் என்று எனக்கு தெளிவாக தெரியாது என்றால் சரியல்ல. எந்த வாகனம் மோதியது என்று எனக்கு தெரியாததனால்தான் நான் கொடுத்த வாக்குமூலத்தில் எந்த ஒரு வாகனத்தையோ எதிரியின் பெயரையோ சொல்லவில்லை என்றாலும், பின்னர் எனது தகப்பனார் மூலமாக பொய்யான புகாரைக் கொடுத்த பின்னர் தான் அந்த புகாரின் அடிப்படையில் நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்னர் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 2000 நெம்பர் மட்டும் தான் எனக்கு தெரியும் அதற்கு முன்பு உள்ள நெம்பர் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரி வேகமாக வந்ததாக சொல்லியுள்ளேன் எவ்வளவு கிலோமீட்டர் ஸ்பீடில் வந்துள்ளார் என்று எனக்கு தெரியது என்றால் சரியல்ல. விபத்தானது எப்போது நடந்திருக்கும் என்றால் மாலை 05.45ல் இருந்து 06.00 மணிக்குள் நடந்திருக்கும். மேற்படி நேரத்தை நான் எனது போலிசார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த போது வெங்கட கிருஷணன் எனக்கு பின்புறம் தான் உட்கார்ந்திருந்தார் என்றால் சரிதான். இரண்டு வாகனங்கள் மோதும்போது இருவரின் இருசக்கர வாகனமும் கீழே விழுந்தது என்றால் சரிதான். பின்புறம் உட்கார்ந்திருந்த வெங்கடகிருஷ்ணனும் கீழே விழுந்துவிட்டார் அவருக்கு எந்தவிதமான கீரல் காயங்களும் ஏற்படவில்லை என்றால் சரிதான். இராணுவத்தில் பணிபுரிவதால் எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே நானும் வெங்கட கிருஷ்ணனும் வாகனத்தில் செல்லுமபோது என்மீது வேறொரு வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு அதன் காரணமாக எனக்கு மட்டுமே காயம் ஏற்பட்டதாகவும் பின்னால் உட்கார்ந்து வந்த வெங்கட கிருஷ்ணனுக்கு எந்தவிதமான கீரல் காயங்களும் ஏற்பட்டிருக்கும் அவ்வாறு இந்த வழக்கில் பின்னால் உட்கார்ந்து வந்த வெங்கட கிருஷ்ணனுக்கு எந்தவித காயமும் ஏற்டாத சூழ்நிலையில் நான் அளவுக்கு அதிகமாக மதுபோதையில் நானே

தனிப்பட்ட முறையில் வாகனத்தை ஓட்டிச்சென்று விபத்து நடந்ததாக சொல்லப்படுகிறன்ற ஏரிக்கரை பகுதி என்பது வளைவான சாலையில் தவறி கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி வெங்கட கிருஷ்ணன் எனது உறவினர் என்பதால் அவரை எனக்கு சாதகமாக பயன்படுத்தி இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றல் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. பொய்சாட்சியம் அளிக்கிறேன் எனறால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கனினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்